செய்தி வெளியீடு எண்: 609 நாள் :11.11.2013

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், சென்னை மண்டல துணை ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்களின் மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் 11.11.2013 அன்று காலை 10 மணியளவில் சென்னை சேப்பாக்கம், எழிலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அரசு செயலாளர், திருமதி.எம்.பி. நிர்மலா,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. சூ. கோபாலகிருஷ்ணன் ,இ.ஆ.ப., குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு. கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், திரு. எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. பெ. சீத்தாராமன் இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள்.

- குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் தரமான அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றி அவர்களுக்குரிய அளவில் வழங்கப்பட வேண்டும். நியாயவிலைக் கடைகளில் தேவையான அளவிற்கு அத்தியாவசியப் பொருள்களை எப்பொழுதும் இருப்பில் வைப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து உரிய காலத்திற்குள் அத்தியாவசியப் பொருள்கள் நகர்வு செய்யப்படுகின்றனவா என்பதை கண்காணிக்க வேண்டும்.

- மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாளில் மக்கள் நலனே எனது அரசின் தலையாய குறிக்கோள் என்று உறுதிபட அறிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக் டன் தரமான விலையில்லா அரிசி 33,746 நியாயவிலை அங்காடிகள் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

- சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியன உரியவர்களுக்கு முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதையும், அங்காடிகளிலிருந்து பதுக்கி கடத்தப்படுகிறதா என்பதையும் மாவட்ட வழங்கல் அலுவலர்கள் உன்னிப்பாக கவனித்து தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முறைகேடுகள் நடைபெற்றால் அவற்றை களைவதுடன், முறைகேடுகளில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு 16.5.2011 முதல் 7.11.2013 வரை 21,974 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 13,836 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவற்றுள் **489 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.**

- புதிய குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய தலத் தணிக்கை மேற்கொண்டு தகுதியான குடும்பங்களுக்கு 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை தவறாமல் வழங்கப்பட வேண்டும். 31.10.2013 நிலவரப்படி 59,154 மனுக்கள் விசாரணைக்காக நிலுவையில் உள்ளன. இவற்றின் மீது உடனடி தலத் தணிக்கை மேற்கொண்டு தீர்வு செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

- அனைத்து மாவட்டங்களிலும், நியாயவிலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. இன்று வரை சேலம் மாவட்டத்தில் 19,369 குடும்ப அட்டைகளும், மதுரை மாவட்டத்தில் 19,046 குடும்ப அட்டைகளும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 15,195 குடும்ப அட்டைகளும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13,804 குடும்ப அட்டைகளும், வேலூர் மாவட்டத்தில் 13,197 குடும்ப அட்டைகளும் போலி என கண்டறியப்பட்டு அவை நீக்கம் செய்யப்பட்டுள்ளன. ஜனவரி 2013 முதல் அக்டோபர் 2013 வரை மட்டும் 1,06,753 போலி குடும்ப அட்டைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

- அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்களும், மாநகர உதவி ஆணையாளர்களும், போலிக் குடும்ப அட்டைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன், புதியதாக வழங்கப்படும் குடும்ப அட்டைகளின் உரிய ஆய்வுக்கு பின்னரே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

- தமிழ்நாட்டில் 1.6.2011 முதல் 31.10.2013 வரை 8 இலட்சத்து 26 ஆறாயிரத்து 707 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தகுதியான குடும்பங்களுக்கு மட்டுமே புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதே நேரத்தில் போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளதா என்பதை கண்டறிந்து அவற்றை களையும் பணியிலும் தீவிரம் காட்டப்பட வேண்டும். இது வரை 2 இலட்சத்து 29 ஆயிரம் போலிக் குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

- மத்திய அரசு மே 2011–ல் 52,806 கிலோ லிட்டராக இருந்த தமிழ்நாட்டிற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை படிப்படியாக குறைத்துக்கொண்டே வந்து நடப்பு நவம்பர் 2013–ல் 29,056 கிலோ லிட்டராக குறைத்துள்ளது. எனினும் மண்ணெண்ணெய் பெற தகுதி பெற்ற குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் மண்ணெண்ணெய் முறையாக கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மண்ணெண்ணெய் வெளிச்சந்தைக்கு கடத்தப்படுகின்றதா என்பதையும் கண்காணித்து தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனக்கூறிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் எரிவாயு இணைப்பு விவரங்களை குடும்ப அட்டைகளில் முத்திரையிடும் பணியை துரிதமாக மேற்கொண்டு நிறைவு செய்ய வேண்டும் என்றும் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

- அதிக எண்ணிக்கையில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளை பிரித்து புதிய நியாயவிலைக் கடைகள் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி அத்தியாவசியப் பொருள்களைப் பெறும் வகையில் 31.10.2013 வரை 366 முழுநேர நியாயவிலை அங்காடிகளும், 703 பகுதிநேர அங்காடிகளும் திறக்கப்பட்டுள்ளன. புதிய நியாயவிலைக் கடைகள் அரசு கட்டிடத்தில் இயங்குவதை உறுதி செய்ய வேண்டுமென அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9